28.10.2024 எம்.சி.ஓ.பி. எண். 40/2021 எ.சா.1 பாஸ்கர்

குறுக்கு விசாரணை

மனுதாரர் எதற்காக மனு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும். தூசி காவல் நிலையத்தில் 01.02.2019 ஆம் தேதி வாகன பதிவு எண் டி.என். 25 எ டபுள்யூ 9000 என்ற வாகனத்தின் ஓட்டுநருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கு பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மனுதாரரை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுப்பிய விவரம் தெரியும். வாகன பதிவு எண் டி.என். 25 எ டபுள்யூ 9000 என்ற வாகனம் என் பெயரில் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் ஜெயக்குமார் பெயரில் உள்ளது. 2ம் எதிர்மனுதாரரிடம் அனுமதி பெற்று வாகனத்தை எடுத்துவந்தேன். விபத்திற்கு பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்காக வாகனத்தை அனுப்பினார்கள் என்றால் சரிதான். என்னுடைய அதிவேகத்தாலும், கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றும் நானும் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழியில் சென்று கொண்டிருந்தபோது நினைவு இழந்து கீழே விழுந்தபோது தான் விபத்து ஏற்பட்டது தான். நான் நினைவிழந்து கீழே விழுந்துவிட்டேன் என்று முதல் விசாரணை உறுதிகூற்றில் சொல்லியுள்ளேன். 2ம் எதிர்மனுதாரரிடம் அனுமதிபெற்று வாகனத்தை எடுத்துவந்து விபத்தை ஏற்படுத்தியதால் நான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. மனுதாரர் விபத்திற்கு பிறகு 2 வருடங்கள் சிகிச்சையில் இருந்துவருகிறார் என்றால் தெரியாது. நான் தான் விபத்திற்கு காரணம் என்றும் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.